# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 10 | குடியியற் கல்வி | நேரம் : |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் : ............................................................. | 3.00 மணித்தியாலம் |

## பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடு வரைக.**

01. “மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சிமுறை சனநாயக ஆட்சிமுறையாகும்.” இக்கூற்றுடன் தொடர்புடைய அறிஞர்
1) ஆபிரகாம் லிங்கன் 2) சீலர் 3) காணர் 4) லவல்

02. எதேன்ஸ், ஸ்பாட்டா நகரங்களில் இடம்பெற்ற ஆட்சி
1) மறைமுக ஜனநாயக ஆட்சி 2) நேரடி ஜனநாயக ஆட்சி
3) பிரதிநிதித்துவ ஆட்சி 4) யாப்பு மயப்படுத்தப்பட்ட ஆட்சி

03. கி.மு. 6ம் நூற்றாண்டில் இந்தியாவில் ஜனநாயக ஆட்சிமுறையினைப் பின்பற்றியதற்கான ஆதாரம் கிடைத்த குடியேற்றம்
1) மகதம் 2) மல்ல 3) குரு 4) வஜ்ஜி

04. இங்கிலாந்தில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிக்கு வித்திட்ட புரட்சி
1) கைத்தொழில் புரட்சி 2) பிரெஞ்சுப்புரட்சி 3) ஆங்கிலப்புரட்சி 4) மக்னாகாட்டா

05. இலங்கையில் வாக்களிப்பதற்குரிய வயதெல்லை
1) 21 2) 18 3) 30 4) 16

06. இலங்கையிலுள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை
1) 25 2) 9 3) 22 4) 20

07. மனித உரிமைப் பிரகடனத்தை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு
1) பாதுகாப்புச்சபை 2) பொதுச்சபை 3) செயலகம் 4) நம்பிக்கை பொறுப்புச்சபை

08. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டம்
1) குடியுரிமைச்சட்டம் 2) மனித உரிமை 3) அரசியல் யாப்பு 4) நீதித்துறை

09. அரசுகளின் மூலக் கூறுகள்
1) நிலம், உழைப்பு, மூலதனம், இறைமை 2) நிலம், மக்கள் தொகை, மூலதனம், இறைமை
3) அரசாங்கம், நாடு, மக்கள் தொகை, உழைப்பு 4) அரசாங்கம், நிலம், மக்கள் தொகை, இறைமை

10. ஓர் இனத்துக்கு ஓர் அரசு என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவான அரசு
1) சர்வாதிகார அரசு 2) கேந்திர அரசு 3) தேசிய அரசு 4) நவீன அரசு

11. மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்து காணப்படும் ஆட்சிமுறை
1) கூட்டாட்சி 2) சமஷ்டி ஆட்சி 3) கூட்டு சமஷ்டி ஆட்சி 4) ஒற்றை ஆட்சி

12. அரசின் விருப்பத்தைச் செயல்வடிவம் பெறச்செய்யும் முகவர்
1) அரசாங்கம் 2) உள்ளூராட்சி மன்றம் 3) மாகாணசபை 4) பிரதேசசபை

13. A. சட்டத்துக்கு விளக்கம் அளித்தல்
B. சட்டத்தை உருவாக்குதல்
C. சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
D. வரவுசெலவுத் திட்டத்தை அங்கீகரித்தல்
மேலே தரப்பட்ட விடயங்களில் சட்டத்துறையின் பணிகள்
1) A யும் B யும் 2) C யும் D யும் 3) B யும் D யும் 4) A யும் C யும்



kalvi.lk

14. பாராளுமன்ற அரசாங்க முறையில் பெயரளவிலான நிர்வாகியைத் தெரிவு செய்பவர்
1) மக்கள் 2) ஜனாதிபதி 3) பிரதமர் 4) சபாநாயகர்

15. ஜனாதிபதி அரசாங்க முறையின் பண்புகளில் அடங்குவது
1) சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படும்.
2) நிறைவேற்றுத்துறையின் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துபவர் ஜனாதிபதி.
3) உண்மை நிர்வாகம் பெயரளவு நிர்வாகம் காணப்படும்.
4) நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு பொறுப்பு கூறுதல் வேண்டும்.

16. சட்டரீதியான கடமைகளில் ஒன்று
1) பெரியோரை மதித்தல் 2) பெற்றோரை பாதுகாத்தல்
3) சமூகப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல் 4) நடைமுறையில் உள்ள சட்டங்களை மதித்தல்

17. மாவட்ட மட்டத்தில் நிர்வாக அதிகாரம் கொண்டவர்
1) அமைச்சின் செயலாளர் 2) மாவட்ட செயலாளர் 3) பிரதேச செயலாளர் 4) கிராம அலுவலர்

18. இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி மன்றங்கள்
1) மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை 2) மாகாணசபை, நகரசபை, பிரதேசசபை
3) மாநகரசபை, கிராமசபை, பிரதேசசபை 4) பட்டினசபை, பிரதேசசபை, கிராமசபை

19. இலங்கை, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் போன்ற நாடுகளில் நிலவும் ஆட்சி
1) ஒற்றை ஆட்சி 2) கூட்டாட்சி 3) சமஷ்டி ஆட்சி 4) கூட்டு சமஷ்டி ஆட்சி

20. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சிமுறை
1) ஒற்றை ஆட்சி 2) சமஷ்டி ஆட்சி 3) மன்னர் ஆட்சி 4) சர்வாதிகார ஆட்சி

21. அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக கி.பி. 1980ல் மாவட்ட அமைச்சு அறிமுகப்படுத்திய சபை
1) நகரசபை 2) கிராமசபை 3) கிராமோதயசபை 4) மாவட்டசபை

22. 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் 13ம் திருத்த சட்டமூலம் உருவாக்கப்பட்ட சபை
1) மாநகரசபை 2) மாகாணசபை 3) மாவட்டசபை 4) நகரசபை

23. மாகாணசபைகளுக்குரிய ஆளுநரை நியமிப்பது
1) பிரதமர் 2) சபாநாயகர் 3) ஜனாதிபதி 4) நீதியரசர்

24. மாகாணசபை நிறுவனக் கட்டமைப்பின் அங்கத்தவர்கள்
1) ஆளுநர், முதலமைச்சர், அமைச்சரவை, மாகாணசபைப் பிரதிநிதிகள் சபை
2) ஆளுநர், பிரதமர், முதலமைச்சர், அமைச்சரவை
3) ஜனாதிபதி, ஆளுநர், முதலமைச்சர், அமைச்சரவை
4) ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர், மாகாணசபைப் பிரதிநிதிகள்

25. அமெரிக்காவின் சட்டத்துறை அழைக்கப்படும் பெயர்
1) பாராளுமன்றம் 2) செனட்சபை 3) காங்கிரஸ் 4) லோச்சபா

26. கன்ரன் என மாநில அரசை அழைக்கும் நாடு
1) அமெரிக்கா 2) இந்தியா 3) சுவிஸ்லாந்து 4) பிரான்ஸ்

27. சுவிஸ்லாந்து நாட்டில் நிறைவேற்றுத்துறை உறுப்பினர்களின் எண்ணிக்கை
1) 7 2) 225 3) 100 4) 10

28. சமஷ்டி ஆட்சியின் பண்புகளில் ஒன்று
1) ஒரு மத்திய அரசாங்கம் மட்டும் இருத்தல்
2) அனைத்து ஆட்சிக் கருமங்களும் மத்திய அரசூமூலம் செயற்படல்
3) மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுக்கும் இடையில் அதிகாரம் பகிரப்பட்டிருக்கும்
4) அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு சவால் விட பிரதேச அலகுகளினால் முடியாது

29. ஜனநாயக ஆட்சிக்கு பொருத்தமான கட்சிமுறை
1) பல கட்சிமுறை 2) இரு கட்சிமுறை 3) ஒரு கட்சிமுறை 4) கூட்டுக்கட்சி முறை



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

30. உலகில் சமஷ்டி ஆட்சி நிலவும் நாடுகளின் தொகுதி
1) ஐக்கிய அமெரிக்கா. சுவிஸ்சர்லாந்து, இலங்கை
2) ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, இலங்கை
3) ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரான்ஸ்
4) ஐக்கிய அமெரிக்கா, சுவிஸ்சர்லாந்து, அவுஸ்திரேலியா

31. இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பில் 11.2% கொண்ட மக்கள்
1) இலங்கைத் தமிழர்
2) இந்தியத் தமிழர்
3) முஸ்லிம்
4) சிங்களவர்

32. பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் செல்வாக்கு செலுத்திய ஆக்கிரமிப்பு
1) விஜயனும் தோழர்களினதும் வருகை
2) சங்கமித்தையும் பிக்குணி குழுவினரதும் வருகை
2) சேனன் குந்திகன் குழுவினரின் வருகை
4) பண்டுவாசுதேவனும் குழுவினரினதும் வருகை

33. அரேபியரின் வர்த்தக நோக்கின் வருகையால் இலங்கையில் உருவான இனம்
1) தமிழர்
2) முஸ்லிம்
3) மலாயர்
4) சிங்களவர்

34. தமிழராலும் சிங்களவராலும் கொண்டாடப்படும் பண்டிகை
1) பொங்கல்
2) தீபாவளி
3) ஆடிப்பிறப்பு
4) வருடப்பிறப்பு

35. பன்மைப் பண்பாட்டு சமூகம் என்பது
1) ஒரு இனத்தவர் வாழுதல்
2) பல இனத்தவர் வாழுதல்
3) ஒருமொழி பேசுவோர் வாழுதல்
4) பல இன, மொழி, மதத்தைச் சேர்ந்தவர் வாழுதல்

36. இலங்கையில் வாழும் பெரும்பான்மை இனத்தவர்
1) சிங்களவர்
2) தமிழர்
3) முஸ்லீம்கள்
4) மலாயர்

37. இலங்கையில் பெருந்தோட்டத்தில் வேலை செய்வதற்கு தொழிலாளராக பிரித்தானியர்களால் அழைத்து வரப்பட்டவர்கள்
1) ஐரோப்பியர்
2) ஆங்கிலேயர்
3) தென்னிந்தியர்
4) சீனர்

38. "வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தல்" இதனை இலக்காகக் கொண்டு செயற்படும் நாடுகள்
1) சிங்கப்பூர், சுவிற்சர்லாந்து
2) இலங்கை, சீனா
3) சுவிற்சர்லாந்து, இந்தியா
4) இந்தியா, இலங்கை

39. பன்மைப் பண்பாட்டு சமூகத்தில் பிரஜை ஒருவரின் பண்பு
1) தமது மொழியினை மட்டும் பாதுகாத்தல்
2) பிற சமயங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாது இருத்தல்
3) பிற சமயங்களை மதிக்காமை
4) பிறர் கருத்துக்களை ஏற்காது விடுதல்

40. நல்லாட்சியின் அடிப்படைப் பண்பு
1) ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தல்
2) ஊழல் நிறைந்த ஆட்சி
3) உரிமைகளைக் கட்டுப்படுத்தல்
4) நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்

(40×1=40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி - II

**01, 02 வினாக்கள் கட்டாயமானது.**
**01, 02 வினா உட்பட, வேறு மூன்று வினாக்களைத் தெரிவு செய்து, ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. இரண்டாம் தவணைக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் "ஒப்படை" என்ற கணிப்பீடு செய்ததை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1. ஒப்படை கணிப்பீடு செய்ய பயன்படுத்திய பாட அலகை எழுதுக. (2 புள்ளிகள்)
   2. அக்கணிப்பீட்டைச் செய்ய ஆசிரியர் வழங்கிய அறிவுறுத்தல்களில் இரண்டு எழுதுக. (2 புள்ளிகள்)
   3. இக்கணிப்பீட்டில் நீர் முன்வைத்த தகவல்களில் 3 தருக. (3 புள்ளிகள்)
   4. இக்கணிப்பீடு செய்ததால் அடைந்த நன்மைகள் 3 குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

02. 1. கிரேக்கத்தில் நேரடி ஜனநாயக ஆட்சி நிலவிய இரு நகர அரசுகளை எழுதுக.
   2. இரு கட்சிமுறை காணப்படும் இரு நாடுகளைக் குறிப்பிடுக.
   3. இலங்கையில் தேர்தல் தொகுதி பிரிக்கப்படும் பொழுது, கவனத்தில் கொள்ளும் இரு அளவீட்டு நியதிகளை எழுதுக.
   4. மத்திய மாகாணத்தில் அடங்கும் இரு மாவட்டங்களை எழுதுக.
   5. அரசு தொடர்பாக வரைவிலக்கணம் முன்வைத்த இரு அறிஞர்களைக் குறிப்பிடுக.
   6. அரசியல் யாப்பின் ஊடாக அதிகாரங்களைப் பகிர்ந்தளித்த நாடுகளில் இரண்டு எழுதுக.
   7. பண்டுகாபய மன்னன் காலத்தில் கிராம நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்ட அதிகாரங்கள் இரண்டையும் குறிப்பிடுக.
   8. இலங்கையில் காணப்படும் மாகாணசபைகளில் இரண்டு எழுதுக.
   9. இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இரு சிறுபான்மை இனங்களை எழுதுக.
   10. இலங்கைக்கு வர்த்தக நோக்கில் வருகை தந்த இரு நாட்டவரைக் குறிப்பிடுக.

(10×2=20 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

03. 1. பாராளுமன்ற அரசாங்கத்தின் உண்மை நிர்வாகியையும் பெயரளவு நிர்வாகியையும் எழுதுக. (2 புள்ளிகள்)
   2. அரசின் வகிபங்கு அல்லது பணிகள் 3 எழுதுக. (3 புள்ளிகள்)
   3) ஜனநாயக ஆட்சிமுறை வெற்றிபெற அவசியமான காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

04. 1. அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் என்பது யாது? (2 புள்ளிகள்)
   2) ஒற்றையாட்சியின் பண்புகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
   3) ஆளுநரின் அதிகாரங்கள் பணிகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

05. 1. 'பண்பாடு' தொடர்பாக வரைவிலக்கணம் கூறிய இரு அறிஞர்களின் பெயரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   2. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் பண்புகள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)
   3. "இலங்கை பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தைக் கொண்ட நாடாகும்." இச்சமூகத்தில் வாழும் பிரசையொருவர் விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

06. 1. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை தோன்றுவதற்குரிய காரணிகள் இரண்டையும் எழுதுக. (2 புள்ளிகள்)
   2. உற்பத்திக் காரணிகளில் மூன்றை எழுதுக. (3 புள்ளிகள்)
   3. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் மூன்றையும் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

07. 1. தேசிய அரசு பலமடைவதற்கு காரணமாக அமைந்த அரசியல் சிந்தனையாளர் இருவரின் பெயர்களை எழுதுக. (2 புள்ளிகள்)
   2. தேசிய அரசு எழுச்சி பெறுவதற்கு பங்களிப்புச் செய்த காரணிகள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)
   3. ஜனநாயக ஆட்சியின் பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)



kalvi.lk

## ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**